புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 25. TML1164 - தொல்லியல் நோக்கில் மகளிர் உடன்கட்டை (சதி) ஏறுதல்

முனைவர் ச. மணிமேகலை,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),

## முன்னுரை

"மங்கையராய் பிறந்திட நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்பது சான்றோர் வாக்கு. இதனால் பெண்ணாய் பிறந்திட்ட அனைவரும் பெருமை அடையலாம். ஆனால் பெண்கள் அனைவரும் சமூகத்தில் உரிமைகளை முழுமையாகப் பெற்றுவிட்டார்களா? என்பதே மிகப் பெரிய வினா? காலத்தையும் மக்கள் பழக்க வழக்கங்களையும், அந்தக்கால இலக்கியங்களை வைத்தே நாம் அறிய முடியும். சமூகம் என்பது எப்படி இருந்தது எனில் அது ஆண்களின் ஆதிக்ககாலமாகவே இருந்திருக்கிறது. ஆண்டான் அடிமை மாதிரியான ஓர் உறவு முறை. ஒரு பெண்ணானவள் ஆண்டாண்டு காலமாக ஆண்களுக்கு அடிமையாகவே இருக்கின்றாள். குடும்பப் பொறுப்புகள், பிள்ளை பெறுதல், அன்பு, பாசம் என எல்லா நற்குணங்களைப் பெற்றிருந்தாலும் அடுத்தவர்களின் நலன் கருதி தன்னுடைய தேவைகளையும், ஆசைகளையுயும் சுறுக்கிக் கொள்கின்ற நிலைக்குத் தள்ளப் பட்டவளாகவே பெண் இருக்கிறாள். இப்படிப்பட்ட அடிமைமுறையானது சங்க இலக்கியப் பெண்களிடம் அதிகளவு இருந்துள்ளது. ஆனால் தற்கால பெண்கள் எல்லாத்துறைகளிலும் பணியாற்ற கூடியவளாகவும், திறனுடனும் செயல்படுகிறாள். அந்த வகையில் தொல்லியல் நோக்கில் மகளிர் உடன்கட்டை ஏறும் மரபு இருந்துள்ளதை ஆராயும் தன்மையில் இக்கட்டுரை அமைந்துள்ளன.

## பெண்ணியம்

கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியம் என்ற கோட்பாடு நவீனத்துவத்தின் சூழலில் எழுந்தது. பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் காலங்காலமாக போராட்டக் கருவியாகவும் சமூகத்தில் முன் வைக்கப்பட்டுள்ளாள்.

பெண் அடக்குமுறைகளின் பல வடிவங்களை வெளிக் கொணர்வதும், அடக்குமுறை, வன்முறை, சமூக புறக்கணிப்புகளுக்கு ஒரு மாற்றாக, மருந்தாக பெண்ணுக்கான சுதந்திரத்தையும், விடுதலையையும் தேடும் நோக்கில் எழுந்ததே பெண்ணியம் ஆகும்.

## கலைகளில் மகளிர்

சங்க இலக்கியத்தில் கலைகளான ஆடல், பாடல், கூத்து போன்றவற்றில் பங்கு கொண்ட பெண்களை பாடினியர், விறலியர் என அழைக்கப்பட்னர். உள்ள குறிப்பினைத் தம் உடம்பில் தோன்றும் மெய்ப்பாடுகளால் வெளிப்படுத்தக்கூடியவள் ஆவாள். விறலியரின் எடல் வருணனைகள் இலக்கியங்களில் பல்வேறு நிலைகளில் பொதுவான நிலையில் பதிவுச் செய்யப்பட்டுள்ளாள். பெண்களை வருணிக்கும் மரபு அக இலக்கியங்களில் உண்டெனினும், புறப்பாடலான பொருநராற்றுப்படையில் உள்ளது போன்ற நீண்ட வருணனைகள் இல்லை.

## சங்க இலக்கியத்தில் உடன்கட்டை ஏறுதலில் மகளிர்

சங்க இலக்கியக்காலத்தில் பெண்கள் கணவன் இறந்தவுன் சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கமானது கடைப்பிக்கப்பட்டுள்ளது இதனை,

''அணில் வரிக் கொடுங்காய்
வாள்போழ்ந்திட்ட காழ்போல்
நல்விளிர் நறுநெய் தீண்டாது'' (புறம். 246)

என்னும் பாடவடிகளில், மன்னன் பூதபாண்டியன் இறந்த பிறகு அவள் மனைவி பெருங்கோப்பெண்டு, பாடிய இப்பாடல் மூலம் கைம்மை நோன்பின் கொடுமை, பெயரளவில் உயிரோடு இருந்து நடைமுறையில் செத்துக் கொண்டிருக்கும், ஆதலால்தான் பெண்கள் கைம்மை கொடுமைக்குப் பயந்தே வாழ வேண்டும் என்ற ஆசையே விட்டுப் போனது. இதனாலேயே பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை விரும்பி ஏற்றுக்கொண்டனர். ஆனால் ஆண்கள் யாரும் உடன்கட்டை ஏறியதாக சான்றுகள் இல்லை. மேலும் உடன்கட்டை ஏறும் நிகழ்வின், ஆதாரமாக,

முல்லைநில ஓர் என்பதால் ஆநிரை (மாடுகள்) வளர்க்கப்பட்டிருக்கும். மாடுகளை பகைவர்கள் கவர்ந்து சென்றபோது அவ்வூரைச் சேர்ந்த வீரர்கள் போரிட்டு உயிரிழந்திருப்பர்.

உடன்கட்டை ஏறிய இக்கல்லை தீப்பாய்ந்தாள் கல், சதிகல் என்றும் அழைக்கப்படும். வீரன் இரு காதுகளிலும் பெரிய வளையங்கள் அணிந்துள்ளார். கழுத்தில் ஆபரணங்களையும் கொண்டை யிட்டுள்ளார். இந்த அமைப்பு, பந்து போல் காட்சியளிக்கிறது. இதில், வீரன் கரந்தை பூ சூடிய வீரனாக இருக்கலாம்.

தொல்காப்பிய புறத்திணையில் குறிப்பிட்டது போல், இவர் கரந்தை பூச்சூடியே போரிடுகிறார் என நம்புகிறேன். மேலும், இவ்வீரன், வலது கையில் வில்லுடனும், இடது கையில் அம்புடனும் காட்சியளிக்கிறார்.

இடையில் கச்சையுடன் கூடிய வாளும் உள்ளது. அவ்வீரனின் இடது தலைப்பகுதியில் மூன்று மாடுகளின் பொறிப்பு உள்ளன. இப்பொறிப்பு ஆநிரை மீட்டலுக்கானது என்பது பறைச்சாற்றுவதாக அமைந்துள்ளன. வலது தலைப் பகுதியில் தேவக்கன்னியர்களின் உருவங்கள் தென்படுகின்றன. இவ்வீரன் போரிட்டு இறந்த பின் தேவக் கன்னிகளான இரம்பை, ஊர்வசி, மேனகை ஆகியோரால் தேவலோகம் (சொர்க்கம்) அழைத்துச் செல்லப்பட்டார் என்பதை விளக்குவதாக உள்ளது.

மேலும் வீரனின் வலது கால் பகுதியில் பெண் பொறிப்பு ஒன்றும் உள்ளது. அப்பெண் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இடது கையை தொங்க விட்ட நிலையிலும், வலது கையில் கற்குடமும் உடன்கட்டை ஏறியதற்கான அடையாள முத்திரையோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பெண்ணானவள் தலையில் கொண்டையும், காதுகளில் குண்டலங்களும் அணிந்துள்ளாள்.

இப்பகுதி மக்கள் இந்நடுகல்லை சிலையப்பசுவாமி (அ) செல்லப்பசாமி என்ற பெயரில் வணங்கி வருகின்றனர். மேலும் இக்கல்லிற்கு ஆடு, மாடு, கோழிகளை பலியிட்டும், குங்குமம், மஞ்சள் இட்டும் வழிப்படுகின்றனர் இக்கல்லின் அருகிலுள்ள மரங்களில் ஆடு, மாடு, கோழிகளை பலியிட்டதற்கான சான்றுகள் உள்ளன.



சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் திருப்போர்ப் புறத்துப் பொருது இருவரும் இறந்தபொழுது அவர் உரிமை மகளிர் அனைவரும் உடன்கட்டை ஏறினர் என்று யுறநானூறு குறிப்பிடும்:

"பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே" (புறம் – 132)

*பொதியமலை சூழ்ந்த நாட்டையாண்ட ஆய் அண்டிரன் இறந்தானாக, அவனுடைய உரிமை மனைவியர் உடன் மாய்ந்தனர் என்று குட்டுவன் கீரனார் எனும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இவ்வாறு உடன்கட்டையேறும் வழக்கம் இடைக்காலத் திலும் இருந்த செய்தி இலக்கியத்தின் வழியும், கல்வெட்டுச் செய்தி வழியும் புலனாகின்றன.*

**காப்பியங்களில் உடன்கட்டை ஏறுதலில் மகளிர்**

*கணவனை இழந்த மகளிர் நிலைகள் "மூவகைத்தாகும். காதலன் இறந்தான் எனக் கேள்வியுற்றஅளவில் உடன் உயிர் நீங்குதல் முதல் நிலையாகும்; கணவரின் ஈமத்தீயிற் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்வது இரண்டாம் நிலை யாகும்; மூன்றாம் நிலை கணவன் இறந்த பின்னர்க் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ்நலாகும். இவ்வாறு மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.*

*காதலர் இறப்பின் கனையெரி பொத்தி ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது இன்னுயிர் ஈவர்! ஈயா ராயின் நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி யுகுவர் நளியெரி புகாஅ ராயின் அன்பரொடு உடனுயிர் வாழ்க்கைக்கு நோற்றுடன் படுவர்.*

*இம்மூன்றனுள் முதல் நிலையாம் உடனுயிர் நீத்தல் பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி கோப்பெருந்தேவி யிடத்தும், இரண்டாம் நிலையாம் ஈமத்தீயில் பாய்தல் பூதப் பாண்டியன் தேவியிடத்தும், மூன்றாம் நிலையாகிய கைம்மை நோன்பு நோற்றல் எண்ணிறந்த மகளிர் மாட்டும் காணப்படுவதாகும்.*

*கணவனை யிழந்தவர்க்கு அம்முறை சொல்லி உலகில் பிறர் எவரையும் காட்ட முடியாதாகையினால் உடன் உயிர்போகும் முதல் நிலை அரிதாகப் போற்றப்பட்டது.*

*கணவன் இறந்ததும் ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர் புதைக்கப்பட்ட இடத்தில் சோட்டம் கட்டும் வழக்கம் பண்டை நாளில் இருந்தது.*

"கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவது இல்" (சிலம்பு: வழக்குரை காதை: 80)

"ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காவினும் ....
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்" (மணிமேகலை – 6 : 55 – 56)

*என்னும் பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.*

**பக்தி இலக்கியத்தில் உடன்கட்டை ஏறுதலில் மகளிர்**

*திருநாவுக்கரச நாயனாரின் தந்தையார் புகழனார் இறந்தவுடன், அவர் மனைவி மாதினியாரும் உடன் இறந்ததாகப் பெரியபுராணம் கூறும் பாடல்,*

"மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையும் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமற் கணவனா ருடன்சென்றார்" (பெரியபுராணம் : திருநாவுகரசர் – 28)

*இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் கி. பி.957 முதல் 70 வரை சோழ நாட்டையாண்ட அரசனாவன். இவன் பொன்மாளிகைத் துஞ்சியபொழுது (இறந்தபொழுது) இவன் மனைவியருள் ஒருவராகிய வானவன் மாதேவியார் என்பார் உடன்கட்டை ஏறினார் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்ந்து பேசும். திருக்கோவலூர்க் கல்வெட்டு இவ்வருஞ் செயலைப் பின்வருமாறு கூறுகின்றது.*

"செந்திரு மடந்தைதன் சீராஜ ராஜன்
இந்திர சமானன் இராஜசர் வஞ்ஞனெனும் புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த
முன்னுமுகம் பிரிந்த முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
தூண்டா விளக்கு
மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்
திருப்புய முயங்கும் தேவி"

இதுபோன்றே முதல் குலோத்துங்கன் தேவி வீரமா தேவியாரும் உடன்கட்டை ஏறியதாக முதல் இராசாதி,

"ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்.......
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்."

இன்றை நாளிலும் செய்தித் தாள்களில் கணவன் இறந்ததனைப் பொறுக்கலாற்றாத மனைவி சோர்ந்து உடனே உயிர்விட்டு இருவரும் ஒரே புதைகுழியில் அடக்கம் செய்யப்படும் நிகழ்ச்சியினைக் காணலாகும்.

**தற்கால மகளிர்**

இன்றைய காலக்கட்டத்தில் உடன்கட்டை ஏறுதல் என்பது அகராதியில் சேர்க்கக்கூடிய சொல்லாகவும், புழக்கத்தில் இல்லாத சொல்லாக கருதப்படுகிறது. யாரோ? யவரோ? ஏதோவெரு காலத்தில் பயன்படுத்திய சொல்லாகவும் தற்காலத்தில் இருக்கிறது. தற்கால பெண்கள் கணவன் இறந்த பிறகும் மறுமணம் செய்து கொள்ளுதல், தனியாக வாழ்தல் போன்ற நிலைகளில் இக்காலப் பெண்கள் நாகரிக மாற்றம் பெற்றுள்ளனர்.

தற்போது பெண்கள் கல்வி அறிவு பெற்று ஆட்சித்துறை, தொழில்துறை, அறிவியல் துறை, மருத்துவத்துறை, சட்டத் துறை, காவல் துறை, இலக்கியத் துறை போன்ற பல துறைகளில் பணியாற்றுவதுடன் வெற்றிநடை போடுவதையும் காண்கிறோம்.

இன்றைய பெண்கள் தொழில் செய்வதில் வல்லவர்களாக திகழ்வதோடு, தொழிற்சாலைகள் தொடங்கி இதில் பலருக்கு வேலை வாய்ப்பளிப்பதையும் காணமுடிகிறது. கிராமப்புற மகளிர் கூட சுயஉதவிக்குழுகளை அமைத்து, அதன் வழியாக சேமித்த தொகையுடன் அரசிடமிருந்து கடன் உதவி பெற்று சிறுசிறு கைத்தொழில்களை செய்து சுயசம்பாதியத்துடன் கௌரவமாகவும், மேன்மையுடனும் வாழ்கின்றனர்.

**முடிவுரை**

அறத்தையும் வீரத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக விளங்கியுள்ளனர் என்பதற்கு மாபெரும் உதாரணம் இந்த உடன்கட்டை ஏறும் நிகழ்வு பெண் மன தைரியம் மிக்கவள் என்பதை பல இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டினாலும் எங்கச்சி என்ற கதாபாத்திரத்தின் மூலம் வீரப்பெண்களின் திடமும் கணவன் மேல் தீராக்காதல் கொண்ட பத்தினிப் பெண்களின் திட்பமும் நமக்குத் தெரியவருகின்றது. இறந்த கணவனின் உடலைத் தழுவி இறக்கத் துணிந்த பெண்களின் பெரும் வீரமாகவே எங்கச்சியின் கதாபாத்திரம் அமைகின்றது. இந்த நாவலில் மட்டுமல்லாது உடன்கட்டை ஏறுவதை நேரில் பார்த்த ஐரோப்பியர்களின் பதிவுகளின் மூலமும் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தன்னை வணங்கியவர்களுக்கு அருள் வழங்கியும் தனது நகைகளை இயல்பாக மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தும் தனது கணவனுடன் தீயில் உயிருடன் தன்னை எரித்துக்கொண்ட பெண்களும் இருந்துள்ளனர் என்பதை நம்மால் அறியமுடிகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

1. புறநானூறு மூலமும் உரையும், உ. வே. சா. பதிப்பு, 2010
2. சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ந. மு. வேங்கடசாமி நாட்டார், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. மணிமேகலை மூலமும் உரையும், ந. மு. வேங்கடசாமி நாட்டார், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
4. பெரியபுராணம், தெ. போ. சோமசுந்தரம் உரை
5. தகலாளர், மாணிக்கவேல், வயது. 29. கிருட்டிணகிரி மாவட்டம்